உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கொளத்தூர் தொகுதியில் 20 கடைகள் வரவிருக்கின்றன. இதுகுறித்து எங்களுடைய துறை அதிகாரிகள் மூலமாக உங்களை சந்திக்கச் சொல்லியிருக்கிறோம். இந்த இடங்கள் மக்கள் விரும்புகிற இடத்தில் இருக்கிறதா, மக்கள் வாங்குகிற இடத்தில் இருக்கிறதா என்பதை அறிந்து அங்கு கடைகளை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடம் முழுமையாகக் கட்டப்பட்டிருந்தால், நிருவாகச் சிக்கல் இருந்தால், நிச்சயமாக துறை ரீதியாக அது களையப்பட்டு, கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், நெடுஞ்சாலையைக் கடந்து மக்கள் வருகின்றார்கள் என்று உறுப்பினர் கூறினார்கள். உடனடியாக அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய தனிக் கவனத்தின் மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில், துறைரீதியாக அந்தக் கடை உடனடியாக பிரித்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

துணை மின் நிலையம்

***39436—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2020 செப்டம்பர் 15]

(அ) திருத்தணி தொகுதி, மத்தூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டிலே மன்னராட்சி சிறப்பாக இருந்தால், வானம் மும்மாரிப் பொழியும் என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில் இன்றையதினம் வரலாற்றில் இல்லாத அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) வருடத்தில் 330 நாட்கள், 100 அடி என்ற அளவில் மேட்டூர் அணையில் நீர் நிரம்பிய வரலாற்றைக் கொண்டு, கோடைக்காலமே தெரியாத அளவிற்கு இந்த ஆண்டு மழை பொழிந்துள்ள ஒரு நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கொரோனா காலத்திலும் மக்களை எவ்வாறு பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்களோ, அதேபோல் விவசாயிகளுக்கும் ஒரு நல்லாட்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி, அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வாழ்த்துகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியான திருத்தணி தொகுதி, மத்தூர் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். திருத்தணி துணை மின் நிலையத்திலிருந்து அந்தப் பகுதிக்கு மின்சாரம் சென்று கொண்டிருக்கின்றது. ஏற்கெனவே அந்தத் துணை மின் நிலையத்தில் 3X10 என்று சொல்லக்கூடிய 30 எம்.வி.ஏ. மின்மாற்றி இருக்கின்ற காரணத்தால், மின்பளு குறைவாகத்தான் இருக்கின்றது. எதிர்காலத்தில் மின்பளு அதிகமாக இருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்துடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருவள்ளூர் மாவட்டத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரியையும், நான் சார்ந்திருக்கிற திருத்தணி

நகர மக்களுக்கு சுமார் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டத்தினையும் தந்திட்ட குடிமராமத்து நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு நாயகர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அன்பு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் தொகுதியின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினம். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏழைகளுக்கு முதன்முதலில் இலவச மின்சாரத்தைத் தந்தவர் நம்முடைய தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 யூனிட் இலவச மின்சாரம், அதனால் சுமார் 78 இலட்சம் மின் உபயோகிப்பாளர்கள் மின்கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லாத நிலை, கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம் என இந்தியத் திருநாட்டிற்கே முன்னோடியான திட்டங்களை வகுத்துத் தந்தவர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, மத்தூர் கிராமம் நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துணை மின்நிலையம் அமைக்கப்படுவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்கின்ற உறுதியினைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தத்தை நிவர்த்தி செய்ய வேண்டியும், மின் கடத்திக் கம்பித் திறனை அதிகப்படுத்த வேண்டியும் உள்ளது. மேலும், இங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கு சர்வே எண் 192/11–ல் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கு துணை மின் நிலையத்தின் அவசியம் கருதி, மறுபரிசீலனை செய்து இவ்வாண்டே இந்தத் திட்டத்தை அம்மாவினுடைய நல்லரசு தொடங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப்

2020 செப்டம்பர் 15]

பகுதி விசைத்தறி அதிகமாக இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பகுதியில் மின்பளு குறைவாக இருப்பதாலும் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்பகுதியில் உள்ள மின் கடத்திகளின் திறனை மேம்படுத்திடவும் கேட்டிருக்கின்றார். அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தத் துணை மின் நிலையத்திற்காக தற்போது இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 35 சென்ட் நிலம் கண்டறியப்பட்டிருக்கின்றது. அந்த இடம் கிடைத்தவுடன் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எதிர்காலத்தில் குறைந்த மின்பளு இல்லாத அளவிற்கு அந்தப் பகுதியில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதனடிப்படையில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதியின் சார்பில் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–20

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் படங்களில் சொன்னதுபோல், மக்களுக்குத் தொண்டு செய்ய மாளிகையிலிருந்து மக்களைப் பார்க்கிறவர் அல்ல; மக்களின் நிலை அறிந்து, மக்களோடு இருந்து மக்களைப் பார்க்கிற, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் திட்டங்களை நிறைவேற்றுகிற முதல்வராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், நான் சார்ந்திருக்கிற திருத்தணி நகராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சுமார் 2 கோடியே 15 இலட்சம் ரூபாயை 30–12–2019 அன்று ஒதுக்கீடு செய்தது; இடமும் வாங்கப்பட்டுவிட்டது. மக்களின் நலன் கருதி உடனடியாக திருத்தணியில் ஒரு துணை மின் நிலையம் தொடங்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியான திருத்தணி தொகுதியில் ஏற்கெனவே 110 கிலோ வாட் துணை மின் நிலையங்கள் நான்கு இருக்கின்றன. அதேபோல 33 கிலோ வாட் துணை மின் நிலையங்கள் ஏழு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு துணை மின் நிலையம் என்பதைவிட, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, எந்தப் பகுதியில் மின் பளு அதிகமாக இருக்கின்றதோ அதைக் குறைக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய மத்தூர் பகுதி விசைத்தறி நிறைந்த பகுதியாக இருக்கின்றது, அங்கே மின் பளு குறைவாக இருக்கின்ற காரணத்தினாலேதான் இப்போது மின்னூட்டி மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையினுடைய இடம் கண்டறியப்பட்டிருக்கின்றது. அந்த இடம் கிடைத்தவுடன் அமைக்கப்படும் என்று சொன்னோம். அதேபோல திருத்தணியிலே ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்கின்றார். ஏற்கெனவே நிறைய துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. இருந்தாலும், அங்கே தேவையின் அடிப்படையில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வங்கக் கடலோரத்தில் 6 அடி சந்தனப் பேழையில் உறங்கியும், உறங்காமல் உறங்கிக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அறிவுலக மேதை, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய 112–வது பிறந்த நாள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டமன்றத்தில், இருமொழிக் கொள்கையை, மாநில சுயாட்சியை, தமிழ்நாட்டிற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர்

2020 செப்டம்பர் 15]

சூட்டுகின்ற அந்தத் தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றிய தலைவர், நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானங்களுக்கெல்லாம் இப்பொழுது ஆபத்து வந்து கொண்டிருக்கிறது. ஆக, அந்த ஆபத்தை நொறுக்கக்கூடிய வகையில் 'நாம் கிளர்ந்தெழுந்திட வேண்டும்' என்ற உறுதியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவருடைய பிறந்த நாளில் அனைவரையும் கேட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய துணைக் கேள்வியை நான் தொடுக்க விரும்புகிறேன்.

என்னுடைய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய நேர்மை நகரில் 33/11 துணை மின் நிலையம் அமைக்க 13–10–2018 அன்று பணி துவங்கப்பட்டது. அந்தப் பணி முடிக்கப்பட வேண்டிய நாள் 21–7–2019. நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய அந்தப் பணியை சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையிலே நான் 3 முறை நேரடியாகச் சென்று ஆய்வு நடத்தினேன். ஆனால், அது இன்னும் முடிவுற்று செயல்பாட்டிற்கு வந்திடவில்லை.

அதேபோல் என்னுடைய தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய கணேஷ் நகரிலே 230/33/11 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த மன்றத்திலே நான் பல முறை எழுப்பியிருக்கிறேன். அந்தப் பணியும் இன்னும் துவங்கப்படவில்லை. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களும், நடுத்தர மக்களும் அதிகமாக வசிக்கின்ற இந்த இரண்டு பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, இந்தக் கோரிக்கை. எனவே, தடையில்லா சீரான மின்சாரம் பெறுவதற்கும், நேர்மை நகர் துணை மின் நிலையத்தின் பணிகளை விரைந்து முடித்திடவும், கணேஷ் நகர் துணை மின் நிலையப் பணிகளை விரைந்து தொடங்கிடவும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேர்மை நகரிலே நடைபெறுகின்ற பணியை வேகப்படுத்த

வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இடையிலே கொரோனா தாக்கம் வந்த காரணத்தினால் 5 மாத காலம் அந்தப் பணிகள் நடைபெறவில்லை. கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே அங்கு சென்று பார்த்திருக்கின்றார்கள். ஆக, அந்தப் பணி விரைவில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

கணேஷ் நகரைப் பொறுத்தவரை, அதற்கு ஏற்கெனவே tender கோரப்பட்டது. Single tender என்ற காரணத்தினால் அந்த tender–ஐ இரத்து செய்துவிட்டு மீண்டும் tender கோரப்பட்டிருக்கின்றது. மீண்டும் tender கோரப்பட்டிருக்கின்ற காரணத்தினால் விரைந்து அந்த tender–ஐ எடுத்து, அந்தப் பணியை முடிப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு முறையும் அவர்களுடைய தொகுதியில் Underground cable வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பார்கள். கிட்டத்தட்ட 255 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவருடைய தொகுதியில் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் 5 கிலோ மீட்டருக்கு H.T. line–க்கான பணிகளும், 250 கிலோ மீட்டருக்கு L.T. line–க்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. H.T. line–ல் கிட்டத்தட்ட 1½ கிலோ மீட்டர் அளவிற்கு பணிகள் முடிந்திருக்கின்றன. அதேபோன்று, 250 கிலோ மீட்டர் L.T. line–ல் கிட்டத்தட்ட 153 கிலோ மீட்டர் அளவிற்குப் பணிகள் முடிந்திருக்கின்றன. கொரோனா தொற்றுநோய் காரணமாக ஐந்து மாத காலமாக பணிகள் எதுவும் நடைபெறவில்லை. இல்லையென்றால் அப்பணிகள் அனைத்தும் முடிந்திருக்கும். டிசம்பர் மாத காலத்திற்குள் அந்தப் பணிகள் முடிவடைந்துவிடும். நேர்மை நகரில் துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிவடைந்துவிடும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, டிசம்பர் மாதத்திற்குள் அந்த இரண்டு பணிகளும் முடிவடைந்துவிடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.